**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 28.10.2025**
**OS. No. 80/2020**
**வழக்கு சாட்சி PW.2–தங்கமணி , த/பெ.பொன்னுசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என் தாயார் பெயர் குருவாயி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சரசு என்னுடைய மூத்த சகோதரி என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் என்னையும் சேர்த்து மொத்தம் 6 நபர்கள் என்றால் சரிதான். நான் சிறு வயதாக இருந்தபோதே என் தந்தை பொன்னுசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான், அப்போது எனக்கு 16 வயது ஆகும். என் தந்தை இறந்த சமயத்தில் நான் சின்னக்காவூரில் குடியிருந்தேன் என்றால் சரிதான். அந்த இடமும் அரசு புறம்போக்கு இடம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியான என் அக்காவை கோட்டமேட்டுபட்டியில் இருக்கும் பழனியப்பன் என்பவருக்கு திருமணம் செய்து வைத்தோம் என்றால் சரிதான். 1969 லேயே என் அக்கா குடும்பத்தினர் தொட்டில்பட்டியிலுள்ள பண்ணாடி காட்டுவளவிற்கு வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல, 1969 ல் ஒரு வருடம் என் வீட்டில் வைத்து நான் தான் அவர்களை பார்த்து கொண்டேன்.

2) 1969 லேயே ஒரு காளியப்பன் என்பவரின் நிலத்தை வாங்கி 1ம் பிரதிவாதி அவரது குடும்பத்தினருடன் தொட்டில்பட்டியிலுள்ள பண்ணாடி காட்டுவளவிற்கு வந்து குடியிருந்தார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு மூன்று மகள்கள் மற்றும் இரண்டு மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 2ம் பிரதிவாதி பெருமாள் மற்றும் 3ம் பிரதிவாதி கதிரவன் தான் அவர்களது ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி பெருமாள் என்பவர் மின் வாரியத்தில் பணி செய்து வருகிறார் என்றால் சரிதான். கதிரவன் என்பவர் அவரது தாயாரான 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல, கூலி வேலை செய்து வருகிறார். என் சித்தப்பா பெயர் கொழந்தைகவுண்டர் என்றால் சரிதான், என் பெரியப்பா

பெயரிரும் கொழந்தைகவுண்டர். என் சித்தப்பா கொழந்தைகவுண்டருக்கு விவசாய நிலம் உள்ளதா என்றால் உள்ளது. நான் என் சித்தப்பா கொழந்தைகவுண்டரிடம் தான் கூலிக்கு விவசாய வேலை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை இறந்தபிறகு என் தாயார் என் சித்தப்பா கொழந்தைகவுண்டரின் விவசாய நிலத்தில் நிரந்தர கூலியாக பண்ணையத்திற்கு என்னை சேர்த்து விட்டார் என்றால் சரியல்ல.

3) சின்னக்காவூரில் உள்ள எங்கள் வீட்டை அனல் மின் நிலையம் கட்டுவதற்காக கையகப்படுத்திகொண்டார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டை கையகப்படுத்தியதற்காகதான் எனக்கு அனல் மின் நிலையத்தில் வேலை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல, எங்கள் நிலத்தை எடுத்துக்கொண்டதற்காக தான் வேலை கொடுத்தார்கள். நான் சொல்வது தவறு என்றும், வீட்டை எடுத்ததற்காகத்தான் எனக்கு வேலை வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தந்தை ஓட்டிக்கொண்டிருந்தது ஓடை புறம்போக்கு நிலம் என்றால் சரிதான். எனக்கு வேலை கொடுத்தவுடன் நான் சேலம் வட்டம், கருப்பூரில் வேலைக்கு சேர்ந்தேன். நான் வேலைக்கு சேர்ந்தபோது Helper ஆக தான் சேர்ந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் எங்கு குடியிருந்தேன் என்றால் பண்ணாடி காட்டுவளவில் குடியிருந்தேன்.

4) நான் பண்ணையத்தில் இருந்ததால் எனக்கு யாரும் பெண் தர முன்வராததால் பண்ணாடி காட்டுவளவில் ஒண்டிவீரன் கோவில் அருகில் 1ம் பிரதிவாதியின் 3 சென்ட் நிலத்தை எனக்கு வழங்கினார் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் தான் நானும், என் தாயாரும் குடிசை அமைத்து தங்கி இருந்தோம் என்றால் சரியல்ல. அதற்கு பின்னிட்டு தான் எனக்கு மின் வாரியத்தில் வேலை கிடைத்தது என்றால் 1976ல் குடி வந்தேன், அதன் பிறகு தான் வேலை கிடைத்தது.

5) மின் வாரியத்தில் வேலை செய்பவர்கள் சுமார் 5கி.மீ தொலைவில் தான் வசிக்கவேண்டும் என்றால் சரிதான், 8 கி.மீ சுற்றளவில் இருக்கவேண்டும், நான் அவ்வாறு தான் குடியிருந்தேன், வாரம் ஒரு முறை தான் பண்ணாடி காட்டுவளவில் இருக்கும் எங்கள் வீட்டிற்கு வருவேன். நான் இறுதியாக மேச்சேரியில் பணி செய்து

ஓய்வு பெற்றேன். நான் ஓய்வு பெற்ற பிறகு தான் என் அக்கா எனக்கு கொடுத்த 3 செண்ட் நிலத்தில் ஓய்வு பெற்ற பணத்தை வைத்து மாடி வீடு கட்டினேன் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 13.11.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.